<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 51/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அப்பாஷ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சிராஜ்யுதின் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.02.2023.

**<u>எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

1. நான் ஓட்டிய வாகனம் open type ஜிப் என்றால் சரிதான். நான் ஓட்டிய ஜீப்பில் ஓட்டுநர் இருக்கை வலது புறம் என்றால் சரிதான். நான் ஓட்டிய ஜீப்பின் இடது பகுதி லாரியின் பின்புற வலது பக்க மூலையில் பட்டு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த எவ்வளவு நேரத்தில் விபத்தில் அடிப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சுமார் கால்மணிநேரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு அரை மணி நேரத்தில் போலிசார் வந்தார்களா இல்லை என எனக்கு தெரியாது. பொதுவாக முன்னால் செல்லும் வாகனத்திற்கு எவ்வளவு இடைவெளியில் பின்னால் செல்லும் வாகனம் செல்ல வேண்டும் என்றால் 10 அடி இடைவெளியில் செல்ல வேண்டும். இந்த விபத்தில் எனக்கு எந்த காயமும் இல்லை. லாரியின் பின்பக்க வலது மூலையில் பட்ட எங்கள் ஜீப் 10 அடி தள்ளி நின்றது.

2. காவல் நிலையத்தில் நடந்த சம்பவத்தை கூறினேனா என்றால் ஆமாம். யாரிடம் என்றால் உதவி ஆய்வாளரிடம் கூறினேன். சம்பவம் நடந்த எவ்வளவு நேரத்தில் கூறினேன் என்றால் அரை மணிநேரத்தில் கூறினேன் அதை அவர் பதிவு செய்தாரா என்றால் பதிவு செய்தார். பதிவு செய்து என்னிடம் கையெழுத்து பெற்றாரா என்றால் ஆமாம். அது தான் சம்பவம் குறித்து முதன் முதலாக போலிசாருக்கு சொன்ன தகவல் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் உதவி ஆய்வளார் என்ன விவரங்கள் எழுதி இருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு என்னை போலிசார் எப்போதும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இடத்தில் எனது ஜீப்பின் டயர் mark இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் லாரி நின்றதால் பதற்றமாகி எனது வாகனத்தை வலது புறம் திருப்பிவிட்டேன் என்று குறிப்பிட்டேன் என்றால் சரிதான்.

3. நான் பதற்றமடையாமல் வாகனத்தின் பிரேக்கை பிடித்திருந்தால் விபத்து தவிர்க்கப்பட்டிருக்கும் என்றால் முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாமல் லைட் எதுவும் போடாமல் இருந்ததால் நான் விபத்து ஏற்பட்டு விடுமோ எனது நினைத்து வலது புறம் திருப்பினேன். லாரிக்கு முன்னால் மொப்பெட் சென்று கொண்டிருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி TVS 50 பைக்கில் சென்று கொண்டிருந்தவர் திடிரென பிரேக் போட்டதால் அவர் மீது மோதமல் இருக்க லாரி பிரோக் போட்டார் என்றால் சரிதான் நான் என் ஜீப்பில் பிரேக் சரியாக பிடிக்காததால் நான் வலது புறம் விபத்தை தவிர்க்க ஜீப்பை திருப்பியபோது லாரியின் ஆங்கில் பட்டு விபத்து ஏற்பட்டது. என் ஜீப் ஆயீல் பிரேக் என்பதால் இரண்டு முறை அழுத்தி மூன்றாவது முறை நன்கு அழுத்தினால் தான் நிற்கும் என்றால் சரிதான். பின்னால் அமர்ந்திருந்தவர்கள் விபத்து நடப்பதை தெரிந்து ஜீப்பில் இருந்து எட்டிக்குதித்து தப்பித்தார்கள் என்றால் சரிதான். அதனால் தான் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்தே எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை நான் அதிவேகமாகவும் கவனக்குறைவாக ஓட்டி சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது வாகனத்திற்கு உரிமம் மற்றும் காப்பீடு இல்லை என்று சொன்னால் உரிமம் உள்ளது காப்பீடு இல்லை. உரிமையாளர் யார் என்று சொன்னால் அப்சல் அவார். எனவே எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 51/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தாரிக்சதாம் உசேன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | அன்வர் பாட்ஷா | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.02.2023.

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. இந்த விபத்து நடந்த எவ்வளவு நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சுமார் 20 நிமிடத்தில் சென்றேன். நான் மருத்துவமனையில் இருந்து பாதியிலேயே சென்றுவிட்டேன் என்றால் தவறு. எனக்கு Scan எடுத்தார்கள் Report வருவதற்கு இரண்டு நாள் ஆகும் என்று சொல்லி என்னை இருப்பதாக இருந்தால் இருக்கலாம் இல்லை என்றால் சென்றுவிடலாம் என்று கூறினார்கள் அதனால் தொடர் சிகிச்சையில் இல்லாமல் சென்றுவிட்டேன். நாங்கள் பயணம் செய்த ஜீப்பில் முன் இடது பக்கம் உட்கார்ந்து இருந்த அப்சல் open type ஜீப் என்பதால் இடது பக்கம் சாய்ந்து உட்கார்ந்ததால் லாரியின் வலது புறம் பட்டு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி அப்சல் ஜீப்பின் வலது புறம் திருப்பும்போது லாரியின் ஆங்கில் தலை மற்றும் நெஞ்சில் பட்டு அதனால்

ஏற்பட்ட காயத்தால் அவர் இறந்தார். open type ஜீப்பில் ஓட்டுநரை தவிர மற்றவர்கள் கவனமுடன் அமர்ந்திருக்கவேண்டும் என்றால் சரிதான். ஜீப்பின் ஓட்டுநர் திடீரென வாகனத்தை திருப்பினால் ஜீப்பில் உள்ளவர்கள் இருபுறமும் சாய்வார்கள் என்றால் சரிதான். எங்களுக்கு முன்னால் சென்ற லாரி எந்தவித அபாய விளக்கும் இன்றி திடீரென 10 அடி தூரத்தில் சென்ற லாரி நின்றதால் எங்கள் ஜீப் இரண்டு அடி லாரிக்குள் சென்று வெளிவரும்படி ஆனது. எனது போலிஸ் விசாரணையில் லாரியின் அபாய விளக்கு எறியவில்லை என்று சொல்லவில்லை என்றால் எங்களில் ஒருவர் விபத்தில் இறந்ததால் அப்போது எங்களுக்கு இருந்த மனநிலையில் விபத்து குறித்து எழுத கூட முடியாத நிலையில் நாங்கள் கூறியதை உதவி ஆய்வாளர் எழுதிக்கொண்டார். விபத்து ஏற்பட்ட உடன் எவ்வளவு அடி தள்ளி எங்கள் ஜீப் நின்றது என்றால் சுமார் 3–5 அடிக்குள் இருக்கும்.

3. முன்னால் செல்லும் வாகனம் திடீரென நின்றால் எங்கள் வாகனத்தை ஓட்டிய டிரைவர் சரியாக பிரேக் போட்டிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் முன்னால் சென்ற வாகனம் நிற்பதற்கு எந்த அறிகுறி இல்லாத சூழ்நிலையில் மேற்படி லாரி நிற்கும் என்று எங்களுக்கு எப்படி தெரியும். எங்கள் வாகனம் எவ்வளவு கிமீ வேகத்தில் சென்றது என்றால் 60–80 கிமீ வேகத்தில் சென்றது. எந்த இடத்தில் இருந்து லாரி எங்களுக்கு முன்னால் சென்றது என்றால் இடம் தெரியவில்லை நாங்கள் செல்லும் திசையில் குறிப்பிட்ட தூரத்திற்கு முன்னால் பார்த்தோம். லாரியை பார்த்த பிறகு எங்கள் ஜீப்பில் சென்றோம் என்றால் அரை கிமீ இருக்கும். எங்கள் ஜீப்பிற்கு முன்னால் சென்ற லாரிக்கு முன்னால் TVS 50 பிரேக் போட்டு திடீரென நின்றது தெரியாது என்றால் சரிதான்.

மேற்படி TVS 50 பைக்கில் சென்று கொண்டிருந்தவர் திடிரென பிரேக் போட்டதால் அவர் மீது மோதாமல் இருக்க லாரி டிரைவர் பிரோக் போட்டார் எங்கள் ஜீப்பை ஓட்டியவர் வேமாக சென்றதால் வாகனததை Control செய்ய முடியால் இந்த விபத்து ஏற்பட்ட என்றால் தவறு லாரி நிற்பது தெரிந்து இருந்தால் நாங்கள் பிரேக் போட்டிருப்போம். லாரி நின்றது தெரியாததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.